முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

# ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த**

**மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

**பிலவ வருடம் ஆவணி மாதம் 20ம் திகதி முதல் ஆவணி மாதம் 27ம் திகதி வரை**

**(05.09.2021 ஞாயிறு முதல் 12.09.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கந்தவேலே கருணை கடலே
   கலசமுனி யானும் உமைபோற்றி
   இந்தியா தமிழகம் தன்னில்
   எதிர்கால பலன்குறித்த ஆசி
2. ஆசிதனை பிலவ வேங்கைதிங்கள்
   அய்நான்கு திகதிமேல் ஐயைந்தீர்திகதிவரை
   பேசிடுவேன் வார நிகழ்வாகவே
   பேதமுள கலியின் தன்மை பாரென்று
3. பாரப்பா கலியின் கொடுமையாக
   பாதுகாக்கும் தலைமை பழுதாகும்
   கூறப்பா தேசமே விலைபோகும்
   குறைவின்றி விலைவாசி உயர்வாகும்
4. ஆகுமே வரிக்கொடுமை கூட்டியே
   அழிவை பின்னடைவை சந்திக்கும்
   வகையான வழிகாட்டல் தெரியா
   வையகமே கலங்கிடும் நிலைக்கு மாறும்
5. மாறுதலை செய்கிறேன் என்று
   மக்களை வஞ்சிக்கும் திட்டம்வழி
   ஆறுதலாக இலவசம் அறிவித்து
   ஆளுமையை நிலைநாட்ட முயலும்
6. முயலுகின்ற இந்தக் கொடுமை
   முழுமைபட கலியின் தன்மையாகும்
   தயவிலா ஆட்சியாக நிகழும்
   தருமத்தை காக்கா தவறும்
7. தவறான நிலைமைகள் மாறியே
   தாயகமான பாரதம் தமிழகமும்
   அவனியிலே வளர்ச்சிதனை காண
   ஆளுமை தயவுஞான வழிக்கு வர

8. வருகவே வடிவேலன் வழிபாட்டை
வழிகாட்டும் அரங்கன் தருமநெறியை
முருகா என ஏற்று வணங்கிவர
முழுமைபட ஞானிகள் ஆசிகிட்டி
9. கிட்டியே ஞானவழி செயல்பாடாகிட
கேடுதரும் பேரிடர் இயற்கைவழித்துன்பம்
கட்டமெல்லாம் விலகி பாதுகாப்பு பெறும்
கட்டாயம் வளர்ச்சித்திட்டங்கள் வகுக்கும் ஞானம்கூடி
10. கூடியே மக்களைநாட்டை காக்கும்
குறைவிலா தயவான ஆட்சியாக மாறி
ஈடேறும் பொருள்வளம் உலகே வியக்க
இந்தியா தமிழகம் சரிவிலா மீளும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் ஆவணி மாதம் 20ம் நாள் 05.09.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் ஆவணி மாதம் 27ம் நாள் 12.09.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

கருணையே வடிவான கந்தவேலனே கலசமுனி அகத்தியமகரிஷி யானும் முருகா உம்மை போற்றி இந்திய தேசத்திலும் தமிழகத்திலும் எதிர்கால பலன் குறித்த ஆசிதனை பிலவ வருடம் ஆவணி மாதம் 20ம் நாள் 05.09.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் ஆவணி மாதம் 27ம் நாள் 12.09.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

பேதா பேதங்கள் நிறைந்திட்ட கலியுகத்தின் தன்மையை பாருங்கள் அதன் கொடுமையை பாருங்கள் உலக மக்களே நாட்டை பாதுகாக்கும் தலைமையே பழுதானதாக போய்விடுவார்கள். சொந்த தேசமே விலைபோகும் கொடுமை நிகழும், விலைவாசிகள் நாட்டினில் கட்டுக்கடங்காமல் போகும். மக்கள் மீது திணிக்கப்படும் வரிக் கொடுமைகள் அதிகமாகும் நாடு அழிவை சந்திக்கும் பொருளாதாரத்திலும் மற்றைய வகையிலும் நாடு பின்னடைவை சந்திக்கும் தக்க முறையில் நாட்டினை வழிநடத்தி செல்வோர் இல்லாததால் இந்த உலகமே கலங்கி நிற்கும்.

அதிகாரத்தின் மீது நாட்டம் கொண்டு நாட்டினில் மாறுதல்களை செய்கிறேன் என்று சொல்லி மக்களை வஞ்சிக்கும் திட்டங்களை செயல்படுத்தியும் மக்களை ஏமாற்றும் வகையில் இலவசங்களை அறிவித்து ஆட்சியை நிலைநாட்ட முயலும் கொடுமைகள் எல்லாம் கலியுகத்தின் கொடுமைகளாகும்.

கலியின் கோரப்பிடியுனுள் அகப்பட்டு தயவில்லாத ஆட்சியாகவும் தர்மத்தை காக்க முடியாத ஆட்சியாகவும் உள்ள தவறான சூழ்நிலைகள் எல்லாம் மாறி தாய்நாடாம் பாரத தேசமும் தமிழகமும் இவ்வுலகினில் மீண்டு எழுந்து முழுமையான வளர்ச்சியை காணவேண்டுமாயின் தயவுடைய ஞானஆட்சியாக மாறி தர்மத்தின் வழியில் வந்திடவும் மக்கள்

எல்லாம் தருமஞான தலைவன் முருகப்பெருமான் வழிபாட்டை செய்திடல் வேண்டுமப்பா. முருகப்பெருமான் வழிபாட்டை உலகிற்கு அருளும் அரங்கரின் தருமநெறி முறைகளை ஏற்று தர்மம் செய்தும் முருகப்பெருமானை வணங்கியும் வர வர மக்களுக்கும் ஆட்சியருக்கும் முழுமையாக ஞானிகளின் ஆசி கிடைத்து ஞானமான செயல்பாடுகள் பெருகி கேடு மிக்க இயற்கை பேரிடர்களாலும் நச்சுக் கிருமிகளாலும் உண்டாகும் துன்பங்கள் எல்லாம் விலகி நாடு அருள் பாதுகாப்பை பெற்றிடும். வளர்ச்சி திட்டங்கள் எல்லாம் பயனுள்ளதாக மாறிடும். அறிவுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களினால் நாடு வளர்ச்சி பெற்று நாடு பாதுகாப்பான சூழலை அடைந்திடும். நாட்டின் பொருளாதாரம் பெருகி இந்த உலகமே வியக்கும் அளவிற்கு இந்திய தேசமும் தமிழகமும் சரிவில் இருந்து மீண்டு மேல்நிலையை அடையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–